பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**28 01 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு ஒழுக்கமும், தேசபக்தியும் கொண்ட குடிமக்கள் அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**2.** நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று உரையாற்றுகிறார்.

**3.** இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையே ஏற்பட்டுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இருதரப்பு உறவில் முக்கிய மைல்கல் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

**4.** பல்கலைக்கழக மானியக் குழுவின் புதிய விதிமுறைகள், எக்காரணம் கொண்டும் தவறாகப் பயன்படுத்தப்படமாட்டாது என்று மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

**5.** **19** வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் உலகக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா **204** ரன் வித்தியாசத்தில் ஜிம்பாப்வே அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு ஒழுக்கமும், தேசபக்தியும் கொண்ட குடிமக்கள் அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் மை பாரத் நாட்டு நலப்பணித் திட்ட முகாமில் கலந்துகொண்டுள்ள தன்னார்வலர்களுடன் நேற்று கலந்துரையாடியபோது இவ்வாறு அவர் கூறினார்.

மாணவ பருவத்தில் தாமும் நாட்டு நலப்பணித் திட்டத்தில் இணைந்து செயல்பட்டதை நினைவுகூர்ந்த குடியரசு துணைத்தலைவர், இளைஞர்களிடையே நற்பண்பு, ஒழுக்கம் மற்றும் சமூகப் பொறுப்பை உருவாக்குவதில் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

நாட்டின் வலிமை, தேசிய ஒருமைப்பாட்டிலும், சமூகத்திற்கு கூட்டாக சேவையாற்றுவதிலும் அடங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

எழுத்தறிவு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பேரிடர் மீட்புப் பணிகளில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களின் பங்களிப்பை திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பாராட்டினார்.

<<<<>>>>

நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திருமதி திரெளபதி முர்மு இன்று உரையாற்றுகிறார்.

பொருளாதார ஆய்வறிக்கை நாளை தாக்கல் செய்யப்படுகிறது.

மத்திய பட்ஜெட் வரும் ஞாயிற்றுக்கிழமை தாக்கல் செய்யப்பட உள்ளது.

இன்று தொடங்கும் நாடாளுமன்ற கூட்டத்தொடரின் முதற்கட்டம் அடுத்த மாதம் 13ஆம் தேதி வரை நடைபெறும்.

இரண்டாம் கட்ட கூட்டத்தொடர் மார்ச் மாதம் 30ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் மாதம் 2ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையே ஏற்பட்டுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இருதரப்பு உறவில் முக்கிய மைல்கல் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

பரஸ்பர நன்மை பயக்கும் இத்தகைய ஒப்பந்தம், சுயசார்பு இந்தியா என்ற இலக்கை வலுப்படுத்தும் ஒரு உத்திசார் வெற்றியாக அமைந்துள்ளது என்று சமூக வலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையும் உலக அரங்கில் இந்தியாவின் பலத்தையும் பறைசாற்றுவதாக வகையில் இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்திய ஏற்றுமதியில் 99 சதவீத பொருட்களுக்கு ஐரோப்பிய சந்தையில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு பெரும் வாய்ப்புகளை இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தும் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையே ஏற்பட்டுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், நாட்டின் ஜவுளி மற்றும் ஆடை தயாரிப்பு துறைக்கு பெரிதும் பலனளிக்கும் என்று மத்திய ஜவுளி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய யூனியன், இந்தியாவின் ஜவுளி மற்றும் ஆடைகளுக்கான இரண்டாவது மிகப்பெரிய ஏற்றுமதி இடமாக இருப்பதே இதற்கு காரணம் என்று அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகளுக்கான இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி நேர்மறையான வளர்ச்சியைக் கண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் ஆயத்த ஆடைகள் முதலிடத்தில் உள்ளதாகவும், பருத்தி ஆடைகள், கைத்தறி ஆடைகள், கைவினைப் பொருட்கள், தரைவிரிப்புகள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பல்கலைக்கழக வளாகங்களில் நிலவும் சாதிய அடிப்படையிலான பாகுபாடுகளைக் களைவதற்காக கொண்டுவரப்பட்டுள்ள பல்கலைக்கழக மானியக் குழுவின் புதிய வழிகாட்டுதல்கள், எக்காரணம் கொண்டும் தவறாகப் பயன்படுத்தப்படமாட்டாது என்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் உறுதியளித்துள்ளார்.

நேற்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாகுபாடு என்ற பெயரில் இச்சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதை தடுப்பது மத்திய - மாநில அரசுகள் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவின் பொறுப்பு என்று கூறினார்.

இந்த விவகாரம் தற்போது உச்சநீதிமன்றத்தின் மேற்பார்வையில் இருப்பதாகவும், அனைத்து நடவடிக்கைகளும் இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் வரம்பிற்கு உட்பட்டே மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்திய பொருளாதாரம் **2030**ஆம் ஆண்டுக்குள் **7** புள்ளி **3** ட்ரில்லியன் டாலராக வளரும் என்று மத்திய கனரக தொழில்கள்துறை அமைச்சர் திரு. குமாரசாமி தெரிவித்துள்ளார்.

புனேயில் சர்வதேச வாகன தொழில்நுட்பக் கருத்தரங்கை நேற்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், தற்போது நாட்டின் பொருளாதாரம் **4** புள்ளி ஒன்று எட்டு ட்ரில்லியன் டாலராக உள்ளது என்று கூறினார்.

பாதுகாப்பான மற்றும் நவீன போக்குவரத்துக்கு அரசு எடுத்து வரும் முன்முயற்சிகளையும் அவர் விவரித்தார்.

மின்சார வாகனங்களை ஊக்கப்படுத்தும் திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் **9** ஆயிரம் சார்ஜிங் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

மின்சார வாகனங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை அளிக்கப்பட்டு வருவதாகவும்,

உள்நாட்டிலேயே பேட்டரிகள் மற்றும் மின்சார வாகனங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை வழங்க 36 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. குமாரசாமி கூறினார்.

<<<<>>>>

மத்திய தொழிலாளர் சட்டங்களை நான்கு சட்டங்களாக மாற்றியது, ஒரு வரலாற்று சிறப்புமிக்க நடவடிக்கை என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்த்லாஜே தெரிவித்துள்ளார்.

விஜயவாடாவில் நேற்று மாநில மற்றும் யூனியன்பிரதேசங்களின் தொழிலாளர் நலத்துறை செயலாளர்களின் இரண்டு நாள் மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இச்சட்டங்கள் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தி தொழிலாளர்களின் நலனை மேம்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன என்று கூறினார்.

புதிய சட்டங்கள் பெண்களுக்கு வேலைவாய்ப்பை அளிப்பதில் முன்னுரிமை அளிப்பதாகவும், முறைசாரா மற்றும் உணவு வினியோகம் செய்யும் தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு திட்டங்கள் இந்த

சட்டங்களின் கீழ் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதிலும் மத்திய அரசு தீவிரமாக உள்ளதாக மத்திய சிறு குறு நடுத்தர தொழில்கள்துறை கூடுதல் செயலாளர் டாக்டர் ரஜினீஷ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் கைவினைக் கலைஞர்களின் கண்காட்சியை பார்வையிட நேற்று எத்தியோப்பியா, அல்ஜீரியா, பெலாரஸ், கியூபா, ஈக்வடார் உள்ளிட்ட 18 நாடுகளைச் சேர்ந்த தூதரக அதிகாரிகள் வருகை தந்தனர்.

அவர்களை வரவேற்றுப் பேசியபோது இதனைத் தெரிவித்த அவர், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பதில் மத்திய அரசின் பங்களிப்பை விரிவாக எடுத்துரைத்தார்.

வெளிநாட்டுத் தூதர்களை வரவேற்கும் வகையில் அசாம், ராஜஸ்தான், பஞ்சாப் மாநிலங்களில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நாட்டின் பன்முகத்தன்மை கொண்ட கலாச்சார பாரம்பரியத்தை உலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில் இந்த நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன.

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தின் எல்லை மாவட்டங்களில் முள்வேலி அமைப்பதற்காக, வரும் மார்ச் 31-ஆம் தேதிக்குள் நிலத்தை ஒப்படைக்க வேண்டும் என்று அம்மாநில அரசுக்கு கொல்கத்தா உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தலைமை நீதிபதி திரு சுஜாய் பால் மற்றும் நீதிபதி திரு பார்த்தசாரதி சென் ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று இவ்வாறு உத்தரவிட்டது.

மத்திய அரசால் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டு, நிதி வழங்கப்பட்ட நிலங்களை உடனடியாக மாற்ற வேண்டும் என்று அந்த அமர்வு உத்தரவிட்டது.

'வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்' தொடர்பான நடைமுறை தாமதங்களை ஒரு சாக்காகப் பயன்படுத்த முடியாது என்றும் நீதிமன்றம் திட்டவட்டமாகத் தெரிவித்தது.

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தில் கடந்த ஒரு மாதத்தில் நிஃபா வைரசால் பாதிக்கப்பட்டவர்கள் என இரண்டு பேர் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களில் பரவி வரும் தவறான மற்றும் யூகங்கள் அடிப்படையிலான தகவல்கள் தவறானவை என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இரண்டு பேருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவுடன் மத்திய அரசு, மாநில அரசுடன் இணைந்து முறையான தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டது என்றும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

**19** வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் உலகக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா **204** ரன் வித்தியாசத்தில் ஜிம்பாப்வே அணியை வென்றது.

**Bulawayo**-வில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட **50** ஓவர் முடிவில் **8** விக்கெட் இழப்புக்கு **352** ரன் எடுத்தது.

353 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஜிம்பாப்வே அணி 37 புள்ளி 4 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 148 ரன் எடுத்து தோல்வியைத் தழுவியது.

---------------

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 4வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ள இந்தப் போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**